**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

**O.S. No. 198 of 2022**

Deposition of **P.W. 1**

Name of the Witness: திருமதி.ஜெயலட்சுமி

Date **: 21.06.2024**

**குறுக்கு விசாரணை**

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு இரண்டு சகோதரர்கள். இரண்டு சகோதரிகள். என்னை படிக்க வைத்து திருமணம் செய்து கொடுத்தது என்னுடைய சகோதரர்கள் தான். எனக்கு சென்னை வில்லிவாக்கத்தில் சொந்தமாக வீடுள்ளது என்றால் சரிதான். என் சகோதரர்களும், எனது அப்பாவும் அந்த வீடை கட்டுவதற்கு பணம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு திருமணத்தின் போது 20 சவரன் நகை போட்டார்கள். கம்பைநல்லூரில் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் எனது கணவர் சக்தி மசாலா ஏஜென்சி நடத்தி வந்தார் என்றால் சரிதான். அந்த ஏஜென்சியை எடுப்பதற்கு எனது சகோதரர்கள் தான் உதவி செய்தார்கள் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் என்னுடைய அப்பா, சகோதர, சகோதரிகளுக்கு இடையே பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு போடுவதற்கு முன்பாக தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 23.07.2001 பாகபிரிவினை பத்திரத்தில் பதிவு செய்யப்பட்டது

என்றாலும் அதில் நானும் எனது உடன் பிறந்தவர்களும் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2) வா.சா.ஆ.2ல் பாகம் பிரிப்பதற்காக நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மண்டபம் கட்டுவதற்கு லோன் வாங்க வேண்டும் என்று தான் கையெழுத்து வாங்கினார்கள். அந்த பாகபிரிவினை பத்திரம் எழுதிய விவரமும். அதில் உள்ள விவரங்கள் எனக்கு எல்லாம் தெரியும் என்றும், கையெழுத்து போட்டு விட்டு தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாவாவில் கடன் பத்திரம் பற்றி சொல்லி வா.சா..ஆ2ல் கையெழுத்து வாங்கிய விவரத்தை சொல்லியுள்ளேன். எனது கணவர் 10ம் வகுப்பு படித்துள்ளார். வா.சா.ஆ.2ல் எனது கணவர் சாட்சியாக போட்டுள்ளார் என்றால் அதில் எனது கணவர் கையெழுத்து போடவில்லை. எனது கணவர் பெயர் எம்.எஸ்.பாஸ்கர். எனது கணவரின் அப்பா பெயர் எம்.சுந்தரமூர்த்தி. ஊத்தரங்கரை முனுசாமி மகன் முருகேசன் எனது அக்கா காமாட்சியின் கணவர். என்னுடைய கணவரும், எனது அக்கா காமாட்சியின் கணவரும் வா.சா.ஆ.2ல் சாட்சியாக இருந்து கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 பத்திரத்தில் எனது கணவர் கையெழுத்து போடவில்லை. வா.சா.ஆ.2ன் நகலை நான் தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். வா.சா.ஆ.2 பத்திரத்தை நான் ரத்து செய்வதற்கு எந்த நடவடிக்கையும் போடவில்லை. வழக்கு போட்டு

விட்டேன். வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் யார் யாருக்கு என்னென்ன சொத்துக்கள் போனது என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. அனைத்து தாவா சொத்துக்களும் என் தாத்தா முனுசாமி பெயரில் பட்டா உள்ளது.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.U.Monica, M.L.
Additional District Judge,
Dharmapuri.